1992 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே 8 படுக்கைகள் அங்கே இருக்கின்றன. 21 ஆக உயர்த்த முடியாது என்று ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன். நிதி நிலைமையின் காரணமாக இப்பொழுது அதைப்பற்றிப் பரிசீலிக்க முடியாது.

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அங்கு 8 படுக்கைகள் உள்ளன. ஆனால் இருந்தாலும் அந்த 8 படுக்கைகள் சரிவர போதாத நிலைமை உள்ளது, அதனால் இந்த ஆண்டில் இல்லை என்றாலும், அடுத்த ஆண்டிலாவது அது மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அடுத்த ஆண்டு அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். இப்பொழுது முடியாது. அடுத்த ஆண்டு நிதி நிலைமையைப் பார்த்த பின்னாலேதான் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் அப்கிரேட் பி.எச்.சி. ஆக அதாவது கம்யூனிட்டி ஹெல்த் சென்டராக மாறி இருக்கின்றன என்பதனை மாண்புமிகு அமைச்சரவர்களின் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் விரிவாகச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 575, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

575—

பாச்சேரியில் சித்த மருத்துவமனை.

*7894— திரு. சி. இராமசுவாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்வராயன்மலை பாச்சேரியில் சித்த மருத்துவமனை திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா;

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கல்வராயன்மலை பாச்சேரி சித்த மருத்துவம் 1987—1988 ஆம் ஆண்டிலேயே அரசு அனுமதி அளித்து கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. தற்காலிகமாக மொட்டாம் பட்டு கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் இப்போது இயங்கி வருகிறது. கட்டிடத்திற்கான பணிகள் பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 9-55

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அங்கு கட்டிடம் கட்ட எந்தவித முயற்சியும் நடைபெறவில்லை. சித்த மருத்துவ மனை கட்டுவதற்காக 2 ஆண்டுகளுக்கு முன்னால், பாச்சேரியில் இடம் ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் இதுவரையில் கட்டிடம் கட்டப்படவில்லை. உடனடியாகக் கட்டிடம் கட்ட, அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3—7—1990 அன்று பொதுப் பணித்துறையிடம் இது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சுகாதார நிலையத்திற்காகவும், குடியிருப்புக்காகவும் 5,10,000 ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலை துவங்கவில்லை என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றி பி.டபிள்யு.டி. யோடு பேசி, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து, பின்னாலே தெரிவிக்கப்படும்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும் போது, மொட்டாம்பட்டியில் சித்த மருத்துவமனை செயல்படுவதாகக் கூறினார்கள். இந்தத் தொகுதியில் அந்த சித்த மருத்துவ மனை எனக்குத் தெரிந்து, இதுவரையில் செயல்படவில்லை. எனவே, உடனடியாக அரசு அங்கு ஒரு கட்டிடத்தைக் கட்டி, சித்த மருத்துவ மனையைத் திறக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1992 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலேயே அது இயங்கிவருவதாக அங்கே தகவல் கொடுத்திருக்கிறார்கள். அது, இப்போது அங்கே சரியாக இயங்காமல் இருந்தால், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே பணம் ஒதுக்கப்பட்டு, அந்த வேலைகள் துவங்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. என்ன காரணத்தினால் அது நின்றிருக்கிறது என்பதைப் பார்த்து, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 576, திரு. கு. லாரன்ஸ், இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. மா. சுந்தரதாஸ், நீங்கள் கேட்கிறீர்களா? திரு. மா. சுந்தரதாஸ். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

576—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மரங்கள் வெட்டப்படுவதைத் தடை செய்ய சிறப்புத் திட்டம்.

*2056—**திரு. கு. லாரன்ஸ்** :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டம் பாதுகாக்கப்பட்ட காடுகளிலுள்ள சிறப்பான தேக்கு, ஈட்டி, கடம்பு மற்றும் பல்வேறு மரங்களின் விலை மதிப்பு குறித்து அரசு மதிப்பீடு செய்துள்ளதா?

(ஆ) இச்சிறப்பான மரங்கள் சென்ற 25 ஆண்டுகளில் எவ்வளவு ரூபாய் பெறுமானமுடையவை கடத்தல்காரர்களாலும் மற்றவர்களாலும் வெட்டப்பட்டுள்ளது.

(இ) இதனைத் தடை செய்ய அரசு சிறப்புத் திட்டம் ஏதும் வகுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ரூபாய் 83 லட்சம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையிலுள்ளது.